புதிய அவையம்
PUTHIYA AVAIYAM (PEER- REVIEWED JOURNAL)
ISSN : 2456-821X
(vol. 9 Issue: 01 June 2025)

==============================================

# இயேசு காவியத்தில் அறச் சிந்தனைகள்

==============================================

**நெறியாளர்**
**முனைவர் க.மோகன்காந்தி**
உதவிப்பேராசிரியர்
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர் மாவட்டம் - 635601

**ஆய்வாளர்**
**திரு. கோ. சந்திரசேகர்.**
Reg.No. 322PHD23P588TAM
முனைவர் பட்ட ஆய்வாளர் பகுதி நேரம்
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை
தூய நெஞ்சக்கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர் மாவட்டம் - 635601

**(திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது)**

**முன்னுரை**

உலகில் மக்கள் முதலில் நாடோடிகளாக வாழ்ந்தனர். அவர்கள் ஒழுக்கநெறி- வாழ்வியல் அறத்தை உணர்த்துவதாகும். துணை நிற்பதாகும். மனிதவாழ்க்கையில் இருந்து பிறப்பது இலக்கியம், சிறந்த இலக்கியத்தின் நோக்கம் நல்ல கருத்துக்களை மக்களுக்கு எடுத்து கூறுவதே ஆகும். இலக்கியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களைத் தாம் ஏற்றுக் கொண்ட கருப்பொருளுக்கு ஏற்ப விளக்கும் தன்மை உடையவை.நாற்பொருள்களுள் முதலாவதாகச் சுட்டப்படும் அறமே எல்லாவற்றுக்கும் தொடக்கமாக அமைகிறது. அறம் என்பதற்கு நல்ல செயல்களின் தொகுதி என்பது பொருளாகும் அந்த வகையில் இயேசு காவியத்தில் உள்ள அறச்செயல்களை எடுத்துக் கூறுவதே நோக்கமாகும்.

பழந்தமிழ் இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றில்அறச்சிந்தனைகள் மிகுந்திருக்கின்றன. அகவாழ்வு ஆயினும், புறவாழ்வாயினும் நேரிய வழியினதாக இருக்க வேண்டும். நம் முன்னோர் போற்றி வந்த வாழ்வியல்நெறிகள் அறங்கள் முதலியவற்றின் தொகுதியாகவே இலக்கியங்கள் காட்சித்தருகின்றன.

‘அறம்’ என்னும் சொல் அறு என்னும் முதனிலை வினை அடியாக பிறந்து தீவினையை அறுப்பதெனப் பொருள்படும். அதன்மூலம் பொருளை உட்கொண்டே ஆசிரியர் ஈண்டு மனத்துக்கண் மாசிலடைதல் அனைத்தறன் என்றார்.

‘அறம்’ என்னும் சொல்லிற்கு தமிழில் எட்டு வகையான பொருள்கள் வழங்கி வருகின்றன. பொதுவாக அது நற்பண்பு அல்லது நல்லொழுக்கம் என்னும் பொருளிலேயே தமிழ் இலக்கியங்களில் வழக்கம் பெற்றிருப்பதை நாம் காணுகின்றோம். மேலும் வழக்கம் நீதி, கடமை, ஈகை,அறக்கடவுள், புண்ணியம், சமயம் போன்ற பொருள்களிலும் வழங்கி வருகிறது. ‘அறம்’ எனப்படுவது முகத்தால் அன்பு கொண்டு இனிமையால் பார்த்து உள்ளத்தில் இருந்து வெளிப்படும் இனிய சொற்களைப் பேசுதல் அறம் என்று,

**“முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானம்**
**இன்சொ லினதே அறம் ”1 - பரிமேலழகர், குறள் எண் 93- ப-79**

இயேசு காவியத்தில் மனிதன் தன் வாழ்க்கையில் நன்னெறியுடன் வாழ்வது அறமே ஒழுக்கத்தின் வெளிப்பாடு அறம் எனலாம். காவியக் கவிஞர் எளியநடையில் பாடல்களை வடிவமைத்து அறத்தினை விளக்கியுள்ளார். இயேசுவை பற்றியும் அவரது மீட்பு பணி பற்றியும் அவர் உலகில் தோன்றுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இறைவாக்குறைஞர்கள் பலர் முன்னுரைத்தனர் அவர்களில் பழைய ஏற்பாட்டில் ‘இசையாஸ் ஆகமம்’ என்னும் ஆகமத்தில் இசையாஸ் என்னும் இறைவாக்குறைஞர் வாக்கு அளித்துள்ளார்.

**“இவனே அந்த இறைவனின் தூதுவன்**
**அன்புடன் இவனை அறிமுகம் செய்கிறேன்**
**ஆண்டவர் வழியை ஆயத்தப் படுத்துக**
**சிறந்ததோர் பாதையைச் செம்மைப் படுத்துக**
**என்றறொரு திருக்குரல் எதிரொலி யாக**
**பாலை வனத்திடைப் படரும் ”2- இயேசு காவியம் ப.17**

இயேசுகிறிஸ்து பிறப்பதற்கு ஆறு மாதத்திற்கு முன் அருளப்பர் (யோவான்ஸ்நானகன் பிறக்கிறார் - அவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துக்கு வழியை ஆயத்தப்படுத்தவும், வருகின்ற மக்களுக்கு, மனத்திரும்புதலுக்கு ஏற்ற உபதேசத்தை கொடுக்கவும், “வனாத்திரத்தில் சத்தம்” எங்கும் பரவி ஒலித்தது.இதை,

**“கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருக்கு பாதைகளை செவ்வை பன்னுங்கள் என்று வனாத்திரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று ஏசையா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே” 3 பரிசுத்தவேதாகமம்,புதிய ஏற்பாடு, மத்,அதி 3;: வச 3**

என்ற வரிகளும் விளக்குகின்றன. பூமியில் அறச்செயல்கள் மழிந்த நிலையில் அதை போதித்திட கிறிஸ்து பிறக்கப் போகிறார் என்ற செய்தியை இப்பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

**“களங்கம் என்றவர் கருத்தினில ; - நினைந்து**
**வெளியே சொல்லவும், விரும்பா ராசி**
**உடனே அவளை ஒதுக்கிட நினைத்தார்**
**வாழ்வதும் தவறு மரியாள் தனது**
**பெயரைக் கெடுப்பதும் பெருத்தவறாகும்**
**என்தால் சூசையர் இப்படி நினைந்தார் ”4-இயேசு காவியம் ப.18**

இப்பாடலில் கன்னி மரியாள் கர்ப்பமுற்று இருப்பதை சூசையப்பர் ஏற்கனவே கன்னி மரியாள் மெய்விவாக ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கிறாள். இந்த சூழ்நிலையில் அவர் திருமணத்திற்கு முன் கர்ப்பமாக இருப்பதால் சூசையப்பர் அவளை தள்ளிவிடலாம் என்று நினைத்திருந்தார். அப்பொழுது தேவதூதன்,

**“கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்கு காணப்பட்டு தாவீதின் குமாரானாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளை சேர்த்து கொள்ள ஐயப்படதே அவளிடத்தில் உற்பத்தியாகிறது பரிசுத்த ஆவியினாலே உன்டானது.5- பரிசுத்தவேதாகமம்,புதிய ஏற்பாடு – மத் அதி 1: வச 20**

இங்கு ஏற்பட்டுள்ள கர்ப்பம் என்ற புனிதமான காரியத்தை. பரிசுத்தமானது என்பதை விளக்குகிறார். இங்கு கூறப்பட்டுள்ள கற்பு என்பது பெண்களுக்கு உரிய சிறந்த இல்லறம் ஆகும். ஒரு பெண் திருமணத்திற்கு முன்னும் சரி திருமணம் அனப் பிறகும் சரி கற்பு நெறியுடன் வாழ வேண்டும். இங்கு கன்னி மரியாள் திருமணமாகமலே கர்ப்பம் ஆகி இருந்தாலும் ஒரு உன்னதமான கருவை வயிற்றில் சுமந்ததினால் மதிப்புக்குள்ளாகிறாள். தாய்மை அடைந்த போதும் கன்னி மரியாள் என்றே அழைக்கப்படுகிறாள்.

**“அந்நாளில் நூலோர்கள், ஆன்றோர்கள், பெரியோர்கள் சொன்னபடி**

**மீட்பதற்குத் தோன்றிவந்தாய் தாலேலோ! ” 6- இயேசு காவியம் ப.24**

இப்பாடல் வாயிலாக இந்த உலகம் ஒரு பாலைவனம் போல் ஆகிவிடக்கூடாது எல்லா மாந்தரும் மீட்கப்படுவதற்கு – ஆதிகாலத்தில் இருந்து அறிவிக்கப்பட்ட மீட்பராகிய இயேசு கிறிஸ்து தோன்றி விட்டார். அவருக்கு எங்களுடைய தாழ்ப்பனிந்து வணங்குகிறோம் என்று தீர்க்கதரிசிகள், இராஜாக்கள், மூப்பர்கள் ஆகியோர் கூறி வந்தனர்.

**“தீயவர் வீழச் சிறந்தவர் வாழ**

**நாயகன் இவனே நடுவினில் நிற்பான்”7- இயேசு காவியம் ப.32**

இப்பாடலில் காவியக்கவிஞர் - தீயவர் என்றால் தீமைகள் அழிந்து அவனுள் வாழ்கின்ற தீமையான காரியங்கள் ஒழிந்து அவன் சிறந்த மனிதனாக மாறுவதற்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவர்களின் இதயங்களை நன்மைக்கேதுவாக மாற்ற இடையினில் நிற்பார் இந்தக் கருத்தை நற்றினை,

**“தீமை கண்டோர் திறத்தும் பெரியோர்**

**தாமறிந்து உணர்க என்ப” 8---நற்றிணை ப.160**

**என்ற பாடலும்,**

**“ஆன்றோர் செல்நெறி வாழாஅச்**

**சான்றோர் ” - - - - - 9- ,நற்றிணை ப.233**

நன்கு கல்வி அறிவு பெற்ற சான்றோர்கள் நல்ல செயல்களை மனதால் உணர்ந்து கடமையாற்றும் திறன் கொண்டவர்கள். தாம் மேற்கொண்ட செயல்களில் கருத்துடையவர்கள் சிறியவர்களின் செயல்களுக்கு தக்க அறிவுரை கூறித் தவறுகளைச் சுட்டிகாட்டி நல்வழிப்படுத்தும் குணம் உடையவர்கள் என்று நற்றினையில் கூறியுள்ளதைப் போன்று ஏசு கிறிஸ்து தீயவர்களுக்கு மத்தியில் தவறு செய்தவர் தானாக உணர்ந்து திருந்தும் வரை பொறுமையுடன் அனைவரையும் இரட்சித்து அருள்வார். **“கீழ்படியாமையினால் இவையாவும் இழக்கப்பட்டன. பாவத்தின் மூலமாக தெய்வீக சாயல் கறைபடுத்தப்பட்டு முழமையாக அழிக்கப்பட்டு மனிதனின் சரீர வல்லமைகள் பெலவீனமாகி, மன வலிமை குறைக்கப்பட்டு, ஆவிக்குரிய பார்வை மங்கலாக்கப்பட்டு, மரணத்திற்கு ஏதுவானான் ஆயினும் மனித இனமானது நம்பிக்கையற்ற நிலையில் விடப்படவில்லை, அளவற்ற அன்பினாலும்,இரக்கத்தினாலும் இரட்சிப்பின் திட்டம் உருவாக்கப்பட்டு, உருவாக்கியவரது சாயலை மனிதனில் திரும்ப கொண்டுவருவதும், அவன் படைக்கப்பட்டதன் தெய்வீக நோக்கத்தை உணர்ந்து கொள்ளும்படியாக சரீரம், மனப் மற்றும் ஆத்துமா ஆகியவற்றின் வளர்ச்சி, ஊக்குவிப்பதும், மீட்பதும் மீட்பின் செயலாக இருக்க வேண்டியிருந்தது. இதுதான் கல்வியின் நோக்கமாக வாழ்வின் மாபெரும் நோக்கமாக இருக்கிறது.”10- ஏலன்.ஜி.உவைட்,கல்வி ப.5**

**“அடுத்தவர் இடத்தில் அன்பு காட்டியும்**
**ஆடல் பாடல் அலுகா திருந்தும்**
**இழந்தோர் இடத்தே இரக்கம் மிகுந்தும்**
**ஈகை உதவி இதயம் மலர்ந்தும்**
**உறவோர் இடத்து உள்ளன்பு வைத்தும்**
**ஊரார் புகழப் பணிவுடன் நடந்தும் ”11- இயேசு காவியம் ப.37**

என்ற பாடல் கவியரசர் எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி, இவ்வுலகத்தின் சிற்றின்ப வேட்கையில் ஈடுபடால் - திக்கற்று வருகிறவர்களை ஆதரித்து அவர்களின் உடல் மற்றும் உள்ளத்தின் வருத்தத்தை நீக்கி அவர்களுக்கு அற்புதம் செய்தார். எல்லாரையும் தன் பிள்ளைகளாக பாவித்து அன்பு செலுத்தினார்.உணவு உடையை கொடையாக வழங்குதல் அறம் எனப்படுவது உலகில் உள்ள உயிர்களுக்கெல்லாம் உணவும்,உடையும், இருக்க இடமும் தரல் என்பதை,

**“ஈருடை கொண்டோர் இல்லா தவர்க்கு**

**ஓருடை தந்து உதவுவீர் உடனே!**

**சீருடை உணவு சிறக்க வைத் துள்ளோர்**

**ஊருடைப் பசியை உடனே தவிர்ப்பீர்! ”12,இயேசு காவியம் ப.48**

இப்பாடலில் காவியக் கவிஞர் இரண்டு வஸ்திரங்களை வைத்துள்ளவன்.ஆடை இல்லாதவர்க்கு தன் ஒரு ஆடையை கொடுக்க வேண்டும் உணவு,உடை வைத்துள்ள செல்வந்தவர்கள். பசியாக உள்ளவனுக்கு தன் ஆகாரத்தை பங்கிட்டு கொடுக்ககடவன் என்று கூறுகிறார்.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்று மணிமேகலை, புறநானூறு உணவும் உடையும் வழங்குவதைப் பெரிய அறமாகக் கூறியுள்ளனர் சங்கச் சான்றோர்கள். உணவு இல்லாமல் இருக்கும் ஒருவனுக்கு உணவை வழங்குவது பசி என்னும் பிணியை போக்குவதாகும்.ஆடை, உணவு இரண்டுமே ஒரு மனிதன் அத்தியவசியம் அது இல்லாமல் வாழ்வது முடியாது என்பதால் அவற்றை கொடுத்து உதவ வேண்டும் என்றார்.

**“அவர்களுக்கு அவர் பிரதியுத்தமாக இரண்டு அங்கிகளையுடையவன் இல்லாதவனுக்கு கொடுக்ககடவன் ஆகாரத்தை உடையவனும் அப்படியே செய்யக்கடவன் என்றான்**.13-**பரிசுத்தவேதாகமம்,புதிய ஏற்பாடு, லூக்,அதி 3: வச 11**

அரசுக்கு அறம் உரைத்தல்

**“அறமெனப் படுவது யாது எனக் கேட்பின்**

**மறவாது இது கேள், மண்ணுயிர்க் கெல்லாம்**

**உண்டியும், உடையும், உறையுடமும் அல்லது**

**கண்டது இல் ”14- மணிமேகலை காதை 7, பாடல் 228 – 231**

அரசன் குடிமக்களிடம் முறையான வரியினைப் பெற்றால் நாடு செழிப்பாகஇருக்கும். அழிவு இருக்காது, இரக்கமி;ன்றி ஆசை கொண்டு அதிகமான

வரியினைத் தான் நினைத்தவாறு வாங்க ஆரம்பித்தால் யானை சென்டி வயல் போல, நாடும் அழிந்துவிடும், மன்னனும் வளம் பெற முடியாது என்று துணிவோடு அறமுரைக்கின்றார் புலவர்.

**“அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே**

**கோடி யாத்து நாடு பெரிது நந்து - - - - - -**

**பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்**

**யானை புக்க புலம் போல**

**தானும் உண்ணான், உலகமும் கெடுமே”15 -புறம் 184 : (5,6,8 – 10)**

என்று மன்னனுக்கு புலவர்கள் அறிவுறித்தியுள்ளனர். இயேசு காவியத்திலும் ஏசுபிரான் அரசு வரி வாங்குவது மக்களை துன்புறுத்தாத வகையில் இருத்தல் வேண்டும் என்பதை அரசர்களுக்கு வலியுறுத்தும் விதமாக கூறுவது குறிப்பிடத்தக்கச் செயலாகும்.

**“அரசு குறித்த அளவை மதித்து**

**வரியை வாங்குவீர் மக்கள் இடத்தே**

**கூடுதல் வாங்குதல் குற்றம் ஆகும் ”16- இயேசு காவியம் ப.48**

என்ற காவிய நடையில் உள்ள வரிகளில் கவிஞர் அரசாங்கம் விதிகின்ற வரி அளவை மட்டுமே வாங்க வேண்டும். கூடுதலாக லஞ்சமாக பெற்றால் அது பாவம், குற்றம் என்று இப்பாடல் வரிகளில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியதை சுட்டி காட்டுகிறார்.

**“அச்சப்படுத்தி அபகரிக்காதீர்**

**அறியா தார்மேல் குறை சொல் லாதீர்!**

**குற்றம் காட்டி கூப்பாடு போடும்**

**குணத்தை விட்டு குணத்துடன் வாழ்வீர்**

**ஊதியம் கொண்டே உள்ளம் மகிழ்வீர் ”17- இயேசு காவியம் ப.48**

மக்களை மிரட்டி வாங்குவதும், ஒன்றும் அறியாதர்கள் மேல் பழியை போடுவதும், பொய்சொல்லி குற்றம் சுமத்தி அவனை வதைக்கும் குணத்தை விட்டு நல்ல குணத்துடன் பெறுகின்ற ஊதியத்திலே மகிழ்ச்சியாக வாழவேண்டும் என அறிவுறுத்துகிறார். அறம், பொருள், இன்பம் இவற்றை

வளர்த்தலே செல்வம் இவற்றை வளர்க்கவில்லையென்றால் உன்னை நீ பாதுகாக்காதவன் ஆகிவிடுவார்
என்பதை,

**“அறமும் பொருளும் இன்பமும் மூன்றும்**

**ஆற்றும் பெரும நின் செல்வம்**

**ஆற்றாமை நின் பேற்றாமையே”18- புறம் 28 : 15 – 17**

இப்பாடலடிகள் நமக்கு உணர்த்துகின்றன. நிலையா உலகில் நிலைபேறுடன் இன்றும் அவர்கள் வாழ்தல் இத்தகு உரிய சிந்தையால் தான் என்பது நம்மையும் நல்வழிப்படுத்துகிதே.

“நல்லவர்க் செல்லாம் நன்மைகள் நடக்கும்

**தீயவர் வாழ்வில் தீமையே சேரும்”19- இயேசு காவியம் ப.49**

என்ற அறக்கருத்து பாடல் வரிகளில் நல்லவர்க்கு கெல்லாம் நன்மைகள் தானக நடக்கும். தீமையை செய்தவன் தீமையினாலே தண்டிக்கப்படுவான் என்று கவிஞர் பாடுகிறார்.இக்கருத்து திருக்குறள் வாயிலாக,

**“அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**

**புறத்த புகழும் இல”20- குறள் எண் - 39 ப-56**

அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும் அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை, புகழும் இல்லாதால் என திருவள்ளுவர் வாயிலாக அறியப்படுகிறோம்.

**“கற்றார் தம்மைக் கற்றார் அறிவர்**

**தம்மிலும் பெரிய தன்மையர் என்றே”21- இயேசு காவியம் ப.50**

என்ற கவிஞர் பாடல்களில் இறைமகனார் இயேசு கிறிஸ்துவானவர் ஞானஸ்தானம் - திருமுழுக்கு பெற வந்தபோது – ஒரு சாதரண மனிதரிடத்தில் இறைவனே வந்து தான் உன்னிடத்தில் திருமுழுக்கு பெற வந்திருக்கிறேன் எனக் கூறும்போது அருளப்பன் இவர்தான் உலகத்தின் பாவத்தை சுமர்ந்து தீர்க்கிற தேவ ஆட்டுகுட்டி என சான்றுரைத்தான், தன்னிடம் வந்தவர், இறைமகன் இயேசு என கண்டுகொண்டார். கற்றார் மட்டும் அந்த வழியை அறிய முடியும் என கவிஞர் குறிப்பிடுகிறார். கற்றவர்களுக்குச் செல்லும் இடமெல்லாம் சிறப்பு என்ற ஔவையார் கூறியதுபோல வள்ளுவரும் தமது குறளின் வாயிலாக இந்தக் கருத்தை,

**“கற்றாருள் கற்றார் என்படுவா கற்றார்முன்**

**கற்ற செலச்சொல்லு லார் “22- குறள் எண் - 722 ப-387-59**

கற்றவரின் முன் தாம் கற்றவைகளைச் அவருடைய மனதில் பதியுமாறு சொல்ல வல்லவர் கற்றவர் எல்லாவற்றை ஏற்றவராக மதித்து கொள்ளப்படுவார் என குறள் வாயிலாக அறிந்து கொள்கிறோம்.

**முடிவுரை**

இவ்வுலகத்தில் உள்ள எல்லாரையும் நேசி, முதலாவது தனிடத்தில் அன்பு கூறுங்கள் என்ற முதலாம் பிரதான கற்பனையும், உன்னை நேசிக்கிறது போல பிறரையும் நேசி என்ற பிரதான இரண்டாம் கற்பனையும் ஒத்து உருவத்துகுள்ளாக அனைவரையும் அன்பு என்ற கட்டளையாக நம்முடைய இயேசு பிரான் விளங்கி அனைவருக்குள்ளும் அவருடைய சமாதானத்தை ஆசியாக வழங்கி அன்பாக வாழ அறத்துடன் கற்று கொடுக்கிறார்.இவ்வாறான செயல்களில் மூலமாய் அறம் பல காலங்களில் தொன்று தொட்டு மக்கள் பக்தி நெறியுடனும் தமது வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ்ந்து வந்துள்ளனர். நிலையாமைத் தன்மையை உணர்ந்து இறைவனை அடையும் வழிமுறைகளை உணர்த்துவதாய் அமைந்தது. அறம், பொருள், இன்பம், வீடு என்றும் நாற்பொருள்களில் சிறக்கும் நோக்கில் படைக்கப்பட்டன.பின்னர் ஆரூயிர்களுக்கெல்லாம் அன்பு செய்வதே அறமாக்கப்பட்டது.

**துணை நூற்பட்டியல்**

**முதன்மை நூல்**


1. **கவிஞர் கண்ணதாசன் - இயேசு காவியம்**

கலைக்காவிரி, 18,

பென்வெல்ஸ் ரோடு,

திருச்சி – 600 001, 2011

2.**புனித பைபிள் - பரிசுத்த வேதாகமம்; -**
இலங்கை வேதாகமச் சங்கம்,
293,காலி வீதி, கொழும்பு.

3.**எலன்.ஜி.உவைட் - கல்வி**
அருணோதய மிசன் டிரஸட்
கூடுவாஞ்சேரி-603202.
முதற்பதிப்பு-2006

4. **பரிமேலழகர் - திருக்குறள் பரிமேலகழர் உரை**
அம்சா பதிப்பகம்,9அ,மேக்மில்லன்
காலனி,நங்கைநல்லூர்,சென்னை-61

5. **வேங்கடசாமி.ந.மு - நற்றினை,**
பாரிநிலையம்,சென்னை-108
முதற்பதிப்புஆண்டு-1989

6.**வேங்கடசாமி.ந.மு. - மணிமேகலை**
சைவசித்தாந்த நூற்பதிப்பு
கழகம், சென்னை
முதற் பதிப்பு –1966

7.**சாமிநாததையர்.உ.வே - புறநானூறு மூலமும் உரையும்**
தமிழ்பல்கலைக்கழகம்,தஞ்சாவுர்
ஆறாம் பதிப்பு-1963